யும் சென்று நச்சுக்கலப்பு எப்படி ஏற்பட்டிருக்கும் என்று ஆராய்கிறார்கள். வாந்தி பேதி உண்டானதை வைத்துக்கொண்டு அந்த வகையான நச்சு எப்படிக் கலந்திருக்கும் என்று அரசு ஆராய்கிறது. அந்தப் பகுதியின் இடத்தையும், மற்றவற்றையும் சுகாதாரத் தலைமை அதிகாரி பார்வை யிட்டிருக்கிறார்கள். அன்று சோறும், சாம்பாரும், முட்டைக்கோஸும், சோயா பீன்ஸ் பவுடரும் கலந்து சாப்பாடு போடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அந்தப் பவுடர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றிய முழு விவரங்களும், நச்சுக்கலப்பு எப்படி ஏற்பட்டது என்பது பற்றியும் அறிக்கையின் மூலம்தான் தெரியவேண்டியிருக்கும். இதுபற்றிவிவாதிப் பதற்காக அவையின் அன்றாட நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசின் சாதாரண நிர்வாகத் திற்கு உட்பட்டிருக்கிற காரணத்தாலும், திரு. ஜேம்ஸ் அவர்களுக்குப் பொது விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தாலும் இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. கவன ஈர்ப்பு.

மின்சார வாரிய ஊழியர்களுக்கு, அரசாங்க ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட கிராக்கிப்படியும், நகர ஈட்டுப்படியும் அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ந. வீராசாமி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. ந. வீராசாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றை மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்நாடு அரசாங்க ஊழியர் களுக்கு சமீபத்தில் உயர்த்தப்பட்ட கிராக்கிப்படியையும், நகர ஈட்டுப்படியை யும் (C. C. A.) மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களு க்கும் அளிக்கவேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமு மான காரியத்தை மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Mr. Speaker, Sir, the Member has invited the attention of the Government to the need for permitting the employees of the Madras State Electricity Board to draw the recent increase in Dearness Allowance and City Compensatory Allowance granted to Government servants.

At the outset it must be pointed out that under Section 79 (*c*) of the Electricity (Supply) Act, 1948, the Madras State Electricity Board has full powers to make regulations with regard to salaries, allowances and other conditions of service pertaining to the staff under its control and under section 78-A of the Act, the Government have powers to give directions to the Board in regard to the discharge of its duties only on questions of policy. The primary responsibility in regard to the grant of the Dearness Allowance rests with the Madras State Electricity Board and the part played by the Government is purely advisory. However, I am making this statement with reference to the facts of the case.

The Madras State Electricity Board has been sanctioning Dearness Allowance to its employees on the same scales as the Government of Madras have been sanctioning to their employees from time to time. In G.O. Ms. No. 971, Finance, dated 17th October 1967, the Government sanctioned an increase in Dearness

[Thiru V. R. Nedunchezhiyan] [5th March 1968.

Allowance to their employees on the scales prescribed therein with effect from 1s November 1967. They also sanctioned the payment of the Madras City Compensatory Allowance at the rates fixed therein to the Government servants with effect from the same date. The Madras State Electricity Board agreed in principle to the grant of similar relief to its employees but its problem was whether the payment should be termed as Dearness Allowance and City Compensatory Allowance or whether it should be in the shape of an ad hoc payment having regard to the possibility of adjusting it later. This question arose because of the impending recommendation of the Central Wage Board for Electricity Undertakings regarding grant of interim relief to the workers, and the need for adjusting the present payment in the event of the Wage Board recommending an ad hoc payment based on certain principles. The Madras State Electricity Board had initial consultations on this issue with the Tamil Nad Electricity Workers Federation, Accounts Subordinates Union and Last Grade Servants Union. A flat rate interim relief was first proposed. Later, after consultation with the Government the Board has decided that the increase in Dearness Allowance on the scales given by the Government may be given as 'interim relief' to all regular employees of the Board eligible for it and that the City Compensatory Allowance termed as 'Madras City Compensatory Allowance' may ge granted to the employees in the Madras City only subject to the condition that the interim relief and City Compensatory Allowance to be paid now is in lieu of any interim relief to be recommended by the Central Wage Board and accepted by the Government of India and that the existing emoluments and payments made under this settlement will be adjusted in the total emoluments that may be decided by the Madras State Electricity Board after the Government of India pass orders on the final recommendations of the Central Wage Board. The payments will take retrospective effect as in the case of Government servants. This decision has been taken after consultation with the Tamilnad Electricity Workers Federation, Accounts Subordinates Union and Last Grade Servants Union and an agreement to this effect was signed by the Board with the Unions on 22nd February 1968.

4. பேரவைத் தலைவரின் விளக்கம்.
பேரவை நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டிய மொழி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி விவாதம் தொடங்கும் முன்னால் ஒரு விளக்கத்தைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். மொழி பற்றி பேரவையின் விதிகள் மூன்று பகுதிகளாக உள்ளன. ஒன்று, பேரவையின் நடவடிக்கைகள் ஆங்கிலம் அல்லது தமிழில்தான் இருக்கவேண்டும். இரண்டு, ஆனால் நடவடிக்கைகள் என்று கருதப்படாமலேயே இந்தியிலோ, தெலுங்கிலோ, மலையாளத்திலோ, கன்னடத்திலோ பேசலாம். மூன்று, இந்த மொழிகள்கூடத் தெரியாதவர்கள் தங்களுடைய தாய்மொழி, மலாய் மொழி, பர்மிய மொழி, ஃப்ரெஞ்ச் மொழி எதுவானாலும் அதில் பேசலாம். இவைகள்தான் இன்றைய விதிகளிலே இருக்கின்றன. இப்பொழுது இருக்கப்பட்ட நிலைமையைச் சொன்னேன். ஆனால் விதியை மாற்ற விரும்பினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது ஆளுகின்ற கட்சியோ விரும்பினால்—தெலுங்கிலும் பேரவையில் நடவடிக்கைகள் இருக்கலாம். என்று மாற்ற விரும்பில்,